முதலமைச்சரான பிறகும் தேர்தல் பிரச்சாரத்தில் பேசுவதைப் போல பேசி வருகிறார் –

# தமிழ்த்தாய் வாழ்த்துப் பாட மோடியிடம் அனுமதி கேட்கிறார் விஜய்!

## கழக மருத்துவ அணிச் செயலாளர் டாக்டர் எழிலன் நாகநாதன் பேட்டி!

**சென்னை, ஜூன் 3–**

**முதலமைச்சரான பிறகும் தேர்தல் பிரச்சாரத்தில் பேசுவதுபோலப் பேசி வருகிறார் விஜய் என்றும் 200 யூனிட் மின்சாரம், விவசாயக் கடன் தள்ளுபடி விவகாரங்களில் தமிழ்நாட்டு மக்களை ஏமாற்றுகிறது தவெக அரசு என்றும் தமிழ்த்தாய் வாழ்த்தைப் பாட மோடியிடம் அனுமதி கேட்கிறார் விஜய் என்றும் செய்தியாளர்களிடத்தில் பேட்டியளிக்கையில் கழக மருத்துவ அணிச் செயலாளர் டாக்டர் எழிலன் நாகநாதன் குறிப்பிட்டார்.**



இதுகுறித்து சென்னை அண்ணா அறிவாலயத்தில் நேற்று முன்தினம் (01.06.2026) மருத்துவர் எழிலன் நாகநாதன் செய்தியாளர்களைச் சந்தித்து கூறியதாவது:-

டெல்லியில் செய்தியாளர்களைச் சந்திக்காமல் அவசர அவசரமாகக் காரில் ஏறிப் போன முதலமைச்சர் விஜய், இன்று திருச்சியில் பொதுமக்களுக்குப் பதிலாகக் "கேப்டிவ் ஆடியன்ஸ்" (Captive Audience) எனப்படும் தேர்ந்தெடுக்கப்பட்ட கூட்டத்தை வைத்து நிகழ்ச்சி நடத்தியுள்ளார். முன்னாள் முதலமைச்சர்கள் டெல்லி சென்று பிரதமரைச் சந்தித்த பிறகு ஊடகவியலாளர்களைச் சந்திப்பது வழக்கம். ஆனால், முதலமைச்சர் விஜய் ஊடகங்களின் கேள்விகளுக்குப் பதிலளிக்காமல் காரில் ஏறித் தப்பிச் செல்வதையே வழக்கமாகக் கொண்டுள்ளார்.

அறிஞர் அண்ணா கூறியதைப் போல, "எதிர்க்கட்சியாக இருக்கும்போது கிண்ணத்தை எப்படி வேண்டுமானாலும் சுழற்றலாம்; ஆனால் ஆளுங்கட்சியாக இருக்கும்போது ஆட்சி என்பது நெய்க்கரண்டியைப் போன்றது, அதனைச் சிந்தாமல் கையாள வேண்டும்". முதலமைச்சர் விஜய் இன்னும் தேர்தல் பிரச்சார மனநிலையிலேயே பேசுவதை நிறுத்திவிட்டு, தமிழ்நாட்டிற்கான தெளிவான "விஷன் ஸ்டேட்மென்ட்" (Vision Statement) வழங்க வேண்டும் என எழிலன் நாகநாதன் கூறினார்.

**விவசாயக்கடன் - ஏமாற்றும் விஜய்!**

மேலும் தேர்தல் அறிக்கையில் அறிவித்தபடி மாதந்தோறும் மின் கட்டணம் மற்றும் 200 யூனிட் இலவச மின்சாரம் வழங்காமல், இன்னும் இரு மாதங்களுக்கு ஒரு முறைக் கட்டணம் வசூலிப்பதையும், அதில் பல்வேறு நிபந்தனைகள் விதிப்பதையும் எழிலன் சுட்டிக்காட்டினார். விவசாயக் கடன்களைத் தள்ளுபடி செய்வதில் மக்களை ஏமாற்றாமல், 2006ல் கலைஞர் அவர்கள் நிபந்தனையின்றி 7,000 கோடி ரூபாயைத் தள்ளுபடி செய்த அரசாணையைப் படித்துப் பார்க்குமாறு முதலமைச்சருக்கு அறிவுறுத்தினார்.

மகளிர் உரிமைத்தொகை, காலை உணவுத்திட்டம், மக்களைத் தேடி மருத்துவம் போன்ற திராவிட மாடல் ஆட்சியின் சாதனைகளைத் தாம் தொடர்வதாகக் கூறிவரும் முதலமைச்சர், புதியதாகத் தமிழ்நாட்டிற்கு என்ன செய்யப்போகிறார் என்றும் கேள்வி எழுப்பினார். 100 யூனிட் இலவச மின்சாரத்தின் தொடக்கம் 1989ல் கலைஞர் வழங்கிய இலவச மின்சாரத்தில்தான் உள்ளது என்பதையும் அவர் நினைவூட்டினார்.

**மாநில உரிமைகளை விட்டுக் கொடுக்கும் விஜய்!**

தமிழ்நாட்டில் தற்போது அதிகரித்துவரும் பாலியல் வன்கொடுமைகள் மற்றும் ஆணவப்படுகொலைகள் குறித்துக் கேள்வி எழுப்பிய எழிலன், முன்பு திமுகவை நோக்கி விஜய் எழுப்பிய கேள்விகள் இப்போது அவரிடமே "பூமராங்" ஆகத் திரும்பிவருவதாகக் குறிப்பிட்டார். மேலும், தமிழ்த்தாய் வாழ்த்தை விட "வந்தே மாதரம்" பாடலுக்கு முக்கியத்துவம் அளிப்பதன்மூலம் மாநில உரிமைகளை முதலமைச்சர் விட்டுக்கொடுக்கிறாரா? என்றும், மேகதாது மற்றும் மும்மொழிக் கொள்கை குறித்து அவர் ஏன் மௌனம் காக்கிறார் என்றும் கேள்வி எழுப்பினார்.

முதலமைச்சர் விஜய் தமது அமைச்சர்களை ஊடகங்களின் கேள்விகளுக்குப் பதிலளிக்க அறிவுறுத்த வேண்டும் என்றும், வெறும் ரசிகர்மன்றத் தலைவராகச் செயல்படாமல் பொறுப்புள்ள முதலமைச்சராகச் செயல்பட வேண்டும் எனவும் அவர் அறிவுறுத்தினார்.

ஈரோடு தெற்கு மாவட்டம் முழுதும்

# முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்த நாள் - நல உதவிகள் வழங்கல்!

## மாவட்டச் செயலாளர் சு.முத்துசாமி அறிக்கை!

*ஈரோடு, ஜூன் 3-*

ஈரோடு தெற்கு மாவட்டம் சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 103வது பிறந்த நாளை முன்னிட்டு இன்று (3.6.2026 - புதன் கிழமை) ஈரோடு தெற்கு மாவட்டத்தில் கீழ்கண்ட இடங்களில் நிகழ்ச்சிகள் நடைபெற உள்ளது என்று மாவட்ட கழக செயலாளர் சு.முத்துசாமி அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



இதுகுறித்து அவரது அறிக்கை வருமாறு:-

சூரியம்பாளையம் பகுதி வார்டு 1 சித்தோடு நால்ரோட்டிலும் வார்டு 2 பெருமாள் மலையிலும் வார்டு 3 ஆர்.என்.புதூரிலும் வார்டு 4 மறவபாளையத்திலும் பெரிய சேமூர் பகுதி வார்டு 5 எல்லப்பாளையத்திலும் சூரியம்பாளையம் பகுதி வார்டு 6 குளம் பஸ் ஸ்டாப்பிலும் வார்டு 7 வண்டிப்பேட்டையிலும் பெரியசேமூர் பகுதி வார்டு 8 கனி ராவுத்தர் குளம் பஸ் ஸ்டாப்பிலும் வார்டு 9 எஸ்.எஸ்.ஆர்.பி நகர் பஸ் ஸ்டாப்பிலும் சூரம்பட்டி பகுதி வார்டு 10 வில்லரசம்பட்டி நால் ரோட்டிலும் பெரிய சேமூர் பகுதியில் வார்டு 11 மாணிக்கம் பாளையம் மாரியம்மன் கோவில் அருகிலும் வார்டு 12 ஈ.பி.பி நகர் 50 அடி சாலையிலும் வீரப்பன் சத்திரம் பகுதி வார்டு 13 சிஎன்சி கல்லூரி எதிரில் கொத்துக்காரர் தோட்டத்திலும் வார்டு 14 நெரிகல் மேட்டிலும் சூரியம்பாளையம் பகுதி வார்டு 15 அன்னை சத்யா நகரிலும் வீரப்பன்சத்திரம் பகுதி வார்டு 16 நாட்ராயன் கோயில் வாட்டர் ஆபீஸ் ரோட்டிலும் வார்டு 17 காவேரி ரோட்டிலும்,

பெரிய சேமூர் பகுதி வார்டு 18 வாய்க்கால் மேடு 5வது வீதி மெயினிலும் சூரம்பட்டி பகுதி வார்டு 19 வெட்டுகாட்டு வலசு பஸ் ஸ்டாப்பிலும் பெரிய சேமூர் பகுதி வார்டு 20 குமலன் குட்டையிலும் வார்டு 21 பெரியவலசு நால்ரோட்டிலும் வார்டு 22 எம்ஜி ஆர் வீதியிலும் வீரப்பன் சத்திரம் பகுதி வார்டு 23 சக்தி ரோடு குமரன் மில்க் அருகிலும் வார்டு 24 சாமியப்பா வீதியிலும் வார்டு 25 ஓங்காளியம்மன் கோயில் அருகிலும் வார்டு 26 விநாயகர் கோயில் வீதியிலும் கோட்டை பகுதி வார்டு 27 கண்ணையன் வீதியிலும் வார்டு 28 கலைஞர் சிலை வளாகத்திலும் பெரிய சேமூர் பகுதி வார்டு 29 சம்பத் நகரிலும் சூரம்பட்டி பகுதி வார்டு 30 திண்டல்மலை பஸ் ஸ்டாப்பிலும் வார்டு 31 மாரியம்மன் கோயில் அருகிலும் பெரியார் நகர் பகுதி வார்டு 32 சங்கு நகரிலும் வார்டு 33 2ம் நம்பர் பஸ் பஸ் ஸ்டாப் சூரம்பட்டியிலும் வார்டு 34 எஸ்.கே.சி ரோடு ஐஸ்வர்யா ஹோட்டல் அருகிலும் கோட்டை பகுதி வார்டு 35 தெப்பக்குளத்திலும் வார்டு 36 செயலாளர் ஹரிகரன் பேட்டரி கடையிலும்,

வார்டு 37 ராஜாஜிபுரத்திலும் கருங்கல்பாளையம் பகுதி வார்டு 38 சின்ன மாரியம்மன் கோவில் அருகிலும் வார்டு 39 அரசிளங்கோ வீதியிலும் வார்டு 40 மோசிகீரனார் வீதியிலும் 41 பகுதி கழக அலுவலகத்திலும் வார்ட் 42 வளையக்கார வீதியிலும் வார்டு 43 மரப்பாலத்திலும் பெரியார் நகர் பகுதி வார்டு 44 குப்பைக்காத்தான் வீதியிலும் வார்டு 45 80 அடி சாலை பெரியார் நகர் பகுதி வார்டு 46 மாரப்பன் வீதி சூரம்பட்டி நால்ரோட்டிலும் சூரம்பட்டி பகுதி வார்டு 47 வார்டு ஆபீஸ் அருகிலும்,

வார்டு48 எம்.எஸ்.கே.நகரியிலும் வார்டு 49 ரங்கம்பாளையம் பஸ் ஸ்டாப்பிலும் வார்டு 50 கே.எஸ்.ஆர் நகரிலும் பெரியார் நகர் பகுதி வார்டு 51 சாந்தான் கருக்கு இரண்டிலும் கருங்கல்பாளையம் பகுதி வார்ட் 52 வட்டக் கழக அலுவலகத்திலும் 53 சமாதானம்மாள் சத்திரத்திலும் கொல்லம்பாளையம் பகுதி வார்டு 54 நாடார் மேட்டிலும் வார்டு 55 சாஸ்திரி நகர் சந்தை அருகிலும் வார்டு 56 சத்யா நகரிலும் வார்டு 57 அண்ணமார் பெட்ரோல் பங்க் அருகிலும் 58 கொல்லம்பாளையத்திலும் வார்டு 59 ரயில்வே காலனி பள்ளி அருகிலும் வார்டு 60 சோலாரிலும்

ஈரோடு ஒன்றியம் சார்பில் காளிங்கராயன் பேருந்து நிறுத்தம் அருகில், லட்சுமி நகர் பேருந்து நிறுத்தம் அருகில், பழைய கால்நடை மருத்துவமனை அருகிலும் சித்தோடு பேரூர் சார்பில் அரசு சித்தோடு அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளி மூன்று ரோடு அருகில், மாகாளியம்மன் கோயில் அருகில், காந்தி மைதானம் காந்தி மைதானத்திலும் நசியனூர் பேரூர் சார்பில் நசியனூர் பேருந்து நிறுத்தம் ரவுண்டானா அருகிலும், சென்னிமலை ஒன்றியம் சார்பில் வெள்ளோட்டிலும், மொடக்குறிச்சி மேற்கு ஒன்றியம் சார்பில் அனுமன் பள்ளியிலும், அவல் பூந்துறை சார்பில் அவல் பூந்துரையிலும், மொடக்குறிச்சி கிழக்கு ஒன்றியம் சார்பில் லக்காபுறத்திலும், மொடக்குறிச்சி பேரூர் சார்பில் மொடக்குச்சியிலும் மொடக்குறிச்சி தெற்கு ஒன்றியம் சார்பில் விளக்கேத்தியிலும் வடுகப்பட்டி பேரூர் சார்பில் வடுகப்பட்டியிலும் அரச்சலூர் பேரூர் சார்பில் அரச்சலூரிலும், கொடுமுடி மேற்கு ஒன்றியம் சார்பில் தாமரைப் பாளையம் பேருந்து நிலையம் அருகிலும், கொடுமுடி தெற்கு ஒன்றியம் சார்பில் ஆவுடையார் பாறையிலும், கொடுமுடி வடக்கு ஒன்றியம் கொளாநெல்லி கொம்பனை புதூரிலும், சிவகிரி பேரூர் சார்பில் சிவகிரி அண்ணா மேடை அருகில் கொல்லங்கோயில் பேரூர் சார்பில் கொல்லாங்கோவில் பேருந்து நிறுத்தம் அருகில் பாசூர் பேரூர் சார்பில் பாசூரிலும் கிளாம்பாடி பேரூர் சார்பிலனர கருமாண்டம்பாளையத்திலும் வெள்ளோட்டம் பரப்பு பேரூர் சார்பில் நடுப்பாளையத்திலும் ஊஞ்சலூர் பேரூர் சார்பில் ஊஞ்சலூரில் வேங்கம்பூர் பேரூர் சார்பில் ஒத்தக்கடை காசிபாளையத்திலும் கொடுமுடி பேரூர் சார்பில் கொடுமுடி புதிய பஸ் நிலையம் மணிக்கூண்டு சென்னசமுத்திரம் பேரூர் சார்பில் சாலைப்புதூரிலும்

காலை 7.30 மணி முதல் 9.30 மணிக்குள் மேலே குறிப்பிட்டுள்ள நிகழ்ச்சிகளை ஈரோடு தெற்கு மாவட்டத்திற்கு உட்பட்ட மாநில, மாவட்ட, மாநகர, பகுதி, ஒன்றிய, பேரூர், வார்டு கழக நிர்வாகிகள், ஊர் கிளை மாவட்ட, மாநகர துணை அமைப்புகளின் நிர்வாகிகள் மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள் அனைவரும் மாநகர பகுதிகளுக்குட்பட்ட 60 வார்டுகளிலும் மற்றும் ஒன்றியங்கள் 15 பேரூர்களிலும் அந்தந்த எல்லைக்குட்பட்ட இடங்களில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவப்படம் வைத்து மாலை அணிவித்து மரியாதை செலுத்தியும், பொதுமக்கள் பள்ளி குழந்தைகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கியும் அவரவர்களின் வசதிக்கேற்ற இடங்களில் கலந்து கொண்டு நிகழ்ச்சியினை சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மேலே குறிப்பிட்டுள்ள நிகழ்ச்சிகள் முடிந்தவுடன் கீழ்க்கண்ட நிகழ்ச்சிகளில் நிர்வாகிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

காலை 9:30 மணிக்கு பெரியார் நகர் மாவட்ட கழக அலுவலகம், காலை 10 மணிக்கு கலைஞர் அறிவாலயம், தளபதி மன்றம், மணல்மேடு மாவட்ட கழக அலுவலகம் இளைஞர் அணி சார்பில் மாற்றுத்திறனாளிகள் மற்றும் ஆட்டோ ஓட்டுநர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்குதல், காலை 10:15க்கு பன்னீர்செல்வம் பூங்காவில் உள்ள கலைஞர் திருவுருவ சிலை, காலை 10:30 மணிக்கு முனிசிபல் காலனியில் உள்ள கலைஞர் திருவுருவச் சிலை காலை 11 மணிக்கு மொடக்குறிச்சி கலைஞர் சிலை உதயம், அன்பகம் ஆகிய இடங்களில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவ சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட உள்ளது.

இவ்வாறு ஈரோடு தெற்கு மாவட்டக் கழக செயலாளர் சு.முத்துசாமி தனது அறிக்கையில் கூறியுள்ளார்.

முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்த நாள் விழா!

# கோவை வடக்கு மாவட்டம் முழுவதும் சிறப்பாகக் கொண்டாடுவீர் !

## மாவட்டச் செயலாளர் தொண்டாமுத்தூர் அ.ரவி வேண்டுகோள்!

*கோவை, ஜூன் 3-*

கோவை வடக்கு மாவட்டத்தில் ஜூன் 3 அன்று முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 103வது பிறந்த நாள் விழாவை செம்மொழி நாளாக கொண்டாட வேண்டுமென அறிவித்த கழக தலைவர், தளபதி அவர்களின் அறிவிப்பின் படிகோவை வடக்கு மாவட்டம், தொண்டாமுத்தூர், மேட்டுப்பாளையம், கவுண்டம்பாளையம் சட்டமன்ற தொகுதிகளுக்குட்பட்ட பகுதிகளில் சிறப்பாக கொண்டாட வேண்டுமென மாவட்ட கழகச் செயலாளர் தொண்டாமுத்தூர் அ.ரவி வேண்டுகோள் விடுத்துள்ளார்.



"என் உயிரினும் மேலான அன்பு உடன்பிறப்புகளே" எனும் காந்தக் குரலுக்கு சொந்தமான எங்கள் முத்தமிழ் அறிஞரே, பெரியாரின் எண்ணங்களை அண்ணாவின் வழியில் நடைமுறை படுத்தி பல லட்சியங்களை சாதித்த பேரறிஞரின் தம்பியே, சட்டங்கள் பல இயற்றி, திட்டங்கள் பல தீட்டி தமிழ்நாட்டை உலகறிய செய்த எங்கள் அன்பு இதயமே, இந்திய ஜனநாயகக் காவலராகத் திகழ்ந்த மூத்த அரசியல் தலைவர், இலக்கியம் கவிதை இதழியல் நாடகம் திரைப்படம் எனத் தொட்ட துறைகள் அனைத்திலும் வெற்றி முத்திரை பதித்த பன்முகத்திறன் கொண்ட படைப்பாளர், உலகெங்கும் வாழும் தமிழர்களின் நெஞ்சங்களில் நிறைந்த நம் 'தமிழினத் தலைவர்' கலைஞர்,

அய்யன் திருவள்ளுவருக்கு தேர் வைத்தால் போதாது என்று வானுயர சிலை வைத்து உலகத்தையே அண்ணார்ந்து பார்க்க வைத்த திருக்குறளுக்கு உரை எழுதிய தங்க பேனாவே உங்கள் பிறந்த நாளில் வணங்குகின்றோம்.

கோவை வடக்கு மாவட்டத்தில் இன்று (ஜூன் 3 ) முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 103வது பிறந்த நாள் விழாவை செம்மொழி நாளாக கொண்டாட வேண்டுமென அறிவித்த கழக தலைவர், தளபதி அவர்களின் அறிவிப்பின் படி, கழக இளைஞரணி இளைஞர் அணி செயலாளர் சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் ஆலோசனைப்படி கழக மேற்கு மண்டல பொறுப்பாளர் கோவை தெற்கு சட்டமன்ற உறுப்பினர் வி.செந்தில் பாலாஜி அவர்களின் வழிகாட்டுதலின்படி தொண்டாமுத்தூர், மேட்டுப்பாளையம், கவுண்டம்பாளையம் சட்டமன்ற தொகுதிகளுக்கு உட்பட்ட ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், வட்டக் கழக, வார்டு கழக, கிளைக் கழகங்கள் தோறும் கலைஞரின் திருஉருவச் சிலைக்கும், சிலை இல்லாத இடங்களில் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து, மலர்தூவி மரியாதை செலுத்தி முதியோர் இல்லங்கள், ஆதரவற்றோர் இல்லங்கள், பார்வையற்றோர் இல்லங்கள், மாணவர் விடுதிகள், கருணை இல்லங்கள், பெண்கள் காப்பகங்கள், மனநல காப்பகம், பார்வையற்றோர் இல்லம் போன்ற இடங்களில் காலை, மதியம், இரவு உணவுகள் வழங்கியும், மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி மற்றும் ஊராட்சிகளில் பணிபுரியும் தூய்மைப் பணியாளர்களுக்கு உணவு, புத்தாடை மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கியும், இலவச கண் மருத்துவ சிகிச்சை முகாம், இரத்த தான முகாம்கள் சிறப்பாக நடத்திட வேண்டுமாய் அனைவரையும் அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

அதுசமயம், நிகழ்ச்சிகள் நடைபெறும் இடங்களில் இந்நாள், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள், மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், வட்டக் கழக, கிளை கழக செயலாளர்கள், பொறுப்பாளர்கள், நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், இந்நாள், முன்னாள், உள்ளாட்சி மக்கள் பிரதிநிதிகள், கழக சார்பு அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள், தலைவர்கள், துணை தலைவர்கள் மற்றும் கழக முன்னோடிகள், கழக தோழர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு செம்மொழி நாயகர் கலைஞரின் பிறந்த நாளை சிறப்பாக கொண்டாடுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன் என்று வேண்டுகோள் விடுத்துள்ளார்.



முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 103வது பிறந்தநாள் விழாவினை முன்னிட்டு தருமபுரி மேற்கு மாவட்ட கழக செயலாளர், முன்னாள் அமைச்சர் முனைவர்.பெ.பழனியப்பன் கன்னிப்பட்டியில் உள்ள கழக மூத்த முன்னோடி ராமச்சந்திரன் அவர்களின் இல்லத்திற்கு நேரில் சென்று அவர்களுக்கு பொன்னாடை அணிவித்து பொற்கிழி ரூ.10000/ வழங்கினார். உடன் காரிமங்கலம் கிழக்கு ஒன்றிய செயலாளர் ஜி.வி.கே.சரவணன்,முன்னாள் ஒன்றிய செயலாளர் அன்பழகன், கே.பி.மாணிக்கம், எம்.ஏ.சிவலிங்கம், அண்ணாமலை உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## பரிவட்டம்



குவளையில்
பூத்த
நறுமுகை நீ

கூலிங்கிளாஸ்
அணிந்த
குறுந்தொகை நீ

கோடி ஆண்டுகள்
கடந்தாலும்

இணை சொல்லவே
முடியா
பெருந்தகை நீ

நாவிலும்
பே நாவிலும்
நர்த்தனம்
ஆடிய

நற்றமிழ்
பூகோளத்து
பொக்கிஷம்
நீ....

நித்தமும்
பிறக்கும்
சூரியனே

ஆறாம் மாதத்து
மூன்றாம்
தேதி என்பது

பாசத்தால்
பெற்ற
பிள்ளையை

அன்னைத்
தமிழுக்கு

அஞ்சுகத்தாய்
பரிவட்டம் கட்டி ஒளிவட்டம்
சூட்டிய

அது
தன்னிகரில்லா
தமிழர் திருநாளன்றோ...



**மருது அழகுராஜ்**
கழகச் செய்தித்
தொடர்புக் குழு
துணைத் தலைவர்